# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1945/4 - 2015 දෙසැම්බර් මස 14 වැනි සඳුදා - 2015.12.14
*1945/4 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கண்டி மாநகர சபையின் மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கேட்டு விலகுதல் காரணமாக கண்டி மாநகர சபையின் மாநகர முதல்வர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் மாநகர முதல்வர் பதவி வகித்த திரு. துஷாந்த மஹீந்திர ரத்வத்தே அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் கண்டி மாநகர சபையின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான கண்டி மாநகர சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. சேன திசாநாயக என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது கண்டி மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. சேன திசாநாயக என்பவர் கண்டி மாநகர சபையின் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டி. ஏ. சீ. என். தலங்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கண்டி மாநகர சபை.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2015, திசெம்பர் 14.

1 - 17



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.